<u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>

<u>நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்</u>

2021–ம் ஆண்டு ஜுன் மாதம் 30ம் தேதி (30.06.2021) புதன் கிழமை பிற்பகல் 05.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ் . பார்த்தசாரதி
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**மன்றபொருள் .1.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் மூன்றாண்டுகளுக்கான ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி (2021 – 2024) 5 இனங்களுக்காக கோரப்பட்டு 10.02.2021 முதல் நடத்தப்பட்டது. அவற்றில் தினசரி சந்தை கட்டண வசூல் , ஆடு மாடு அறுக்குமிட கட்டண வசூல் , பேருந்துநிலைய சைக்கிள் நிறுத்தும் இட கட்டண வசூல் ஆகியவை விடப்பட்டு சம்மந்தப்பட்ட ஏலதாரர்களிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது மீதமுள்ள இரு இனங்களான பேருந்து நிலையத்திற்கு வரும் பேருந்துகளுக்கு கட்டண வசூல் மற்றும் பேருந்து நிலைய கழிவறை கட்டண வசூல் ஆகியவை தொடர்ச்சியாக ஏலதேதி அறிவித்தும் ஏலம் போகவில்லை, தொடர்ச்சியாக தேர்தல் விதிமுறைகள் அமலில் இருந்ததாலும் கொரோனா உள்ளிட்ட பணிகள் உள்ளதாலும் (ம) பேருந்துகள் பேருந்து நிலையத்திற்கு வராத நிலையில் கடந்த ஏப்ரல் 2021 முதல் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழல் உள்ளது எனவே எதிர்வரும் ஜுலை 2021 வரை அல்லது கொரோனா தடுப்பு பணிகள் முடியும் வரை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நிறுத்திவைக்க மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. .

<u>அலுவலககுறிப்பு:–</u> பேருந்துகள் பேருந்து நிலையத்திற்கு வராத நிலையில் உள்ளதாலும் (ம) தேர்தல் விதிமுறைகள் இருந்ததாலும் கொரோனா தடுப்பு பணிகள் உள்ளதாலும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிறுத்திவைக்கலாம்

<u>ந.க.எண்:3169/2020/அ1</u>

**தீர்மான எண் . 84 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .2.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள 30 வார்டுகளில் உள்ள பொது மக்களுக்கு 13 மேல்நிலை நிர்த் தேக்க தொட்டிகள் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது . . மேற்படி குடிநீரில் தொற்று நோய் வரவாமல் தடுக்கும் வகையில் திரவகுளோரின் கலக்கப்படுகிறது . தற்சமயம் காலை , மாலை இரண்டு வேலைகளிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது . மேற்படி குடிநீரில் கலப்பதற்கு திரவ குளோரின் ஒரு வருட காலத்திற்கு தேவைப்படுகிறது . எனவே குடிநீர் விநியோகம் அவசர அவசியம் கருதியும் , பொது மக்கள் நலன் கருதியும் மற்றும் குரோனா வைரஸ் தாக்குதல் காரணமாகவும் சுத்தகிரிக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டியுள்ளது . எனவே ஒரு ஆண்டு காலத்திற்கு தேவையான திரவகுளோரின் 22000 லிட்டர் தேவைப்படுகிறது . இதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.350000/– ஐ நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

<u>அலுவலக குறிப்பு:- 1.</u> மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

(ந.க.எண் . 2067/2021/இ1)

**தீர்மான எண் . 85 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .3.** இந்நகராட்சி ஆணையாளர் திரு.எஸ். பார்த்தசாரதி அவர்கள் 12.02.2021 வந்தவாசி நகராட்சியிலிருந்து நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு பணி மாற்றியதற்காக அவரும் அவரது குடும்பத்தினரும் பயணம் செய்த பயணப்படி தொகை ரூ.5320/–ஐ அவருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம் .
**(ந.க.எண் . 1526/2021/இ1)**
**தீர்மான எண் . 86 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .4.** நெல்லிக்குப்பம் நகராட்சி கொரானா வைரஸ் இரண்டாம் அலை தாக்குதல் காரணமாக பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த ஈப்பு வாகனம் TN-31/AE5944 –ல் புதியதாக மைக்செட் வாங்கி பொருத்தப்பட்டதற்கு ரூ.12305/– திரு.வாசு , நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளருக்கு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது . .
**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம் .
**(ந.க.எண் . 1458/2021/இ1)**
**தீர்மான எண் . 87 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .5.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் பணிக்கு தினசரி 3 நபர்கள் வீதம் பிப்ரவர் –2021 , மார்ச் – 2021 மற்றும் ஏப்ரல் – 2021 ஆகிய இரண்டரை மாதம் மனித சக்தி பயன்படுத்தியதற்காக உரிய பட்டியல் தொகை ஒப்பந்ததாரர் திருமதி. எஸ். பரிமளா அவர்களுக்கு ரூ.77040/– நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது . .
**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம் .
**(ந.க.எண் . 1648/2021/இ1)**
**தீர்மான எண் . 88 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .6.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கே.எஸ்.ஏ.ஆர் சாலை அருகில் உள்ள கழிவு நீர் வடிகாலில் உள்ள அடைப்பை சரி செய்த பணிக்கு ரூ.15200/– திருமதி.புவனேஸ்வரி , அவர்களுக்கு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது . .
**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம் .
**(ந.க.எண் . 1458/2021/இ1)**
**தீர்மான எண் . 89 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.7.**துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) கடலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.6873/ஆ4/2019, நாள்.30.06.2021ல் கடலூர் மாவட்டத்தில் கொசு பெருக்கத்தினால் டெங்கு காய்ச்சல் எதுவும் பரவாமல் தடுத்திடும் பொருட்டும், கொரோனா தொற்று நோய் கட்டுபடுத்தும் விதமாகவும், தற்சமயம் பணிபுரிந்து வரும் கொசு தடுப்பு பணியாளர்களை ஜீலை/2021 முதல் செப்டம்பர்/2021 முடிய மூன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு வழங்கி உத்திரவு வுழங்குமாறு ஆணையர் அவர்களை கேட்டுக் கொண்டு உள்ளார்கள்.

எனவே, தற்சமயம் நகர் உள்ள 12,000 குடியிருப்புகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் கடிதத்தின் வாயிலாக தெரிவித்துள்ள அறிவுரையின்படி, 300 குடியிருப்புகளுக்கு 1 DBC பணியாளர் வீதம் 12,000 குடியிருப்புகளுக்கு 40 DBC பணியாளர்களை நியமித்து டெங்கு காய்ச்சல் மற்றும் கொரோனா தொற்று கட்டுபடுத்தும் பணிக்கு பயன்படுத்திட அனுமதி வேண்டப்படுகிறது.

40 DBC பணியாளர்களை மகளிர் சுய உதவிக்குழு மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.200/– வீதம் வழங்கிடவும், அதற்கான மூன்று மாதங்களுக்கு உத்தேச செலவினம் ரூ.7.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. ஜீலை/2021 முதல் செப்டம்பர்/2021 முடிய மூன்று மாதங்களுக்கு விவேகானந்தர் மகளிர் சுய உதவிக் குழு, 16 பங்களா தெரு, நெல்லிக்குப்பம் என்கின்ற குழு மூலம் 40 DBC பணியாளர்களை நியமித்து பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

3. இச்செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதி / கொரோனா தடுப்பு நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2015/2017/எச்1**
**தீர்மான எண் . 90 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.8.** நகராட்சி பொது சுகாதாரம் – கொரோனா தொற்று நகராட்சி பகுதியில் 30 வார்டுகளுக்கும் தொடர்ந்து கண்டறியப்பட்டு வருவதினால், பொது இடங்களில், தொற்று உள்ள குடியிருப்பு பகுதிகளிலும் கிருமிநாசினிகள் தினமும் தெளித்திட வேண்டி உள்ளதினாலும், தினமும் கூடுதலாக பிளீச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு, லைசால் அல்லது அதற்கு இணையானவை தேவைப்படுகிறது. மேலும் கொரோனா தொற்று உள்ள பகுதியிலும் குடிசைகள் அதிகமுள்ள வார்டு பகுதிகளில் வசிக்கக்கூடிய பொதுமக்களுக்கு கபசுர குடிநீர் வழங்கப்பட்டு வருவதினால், கபசுர குடிநீர் பவுடர் தேவைப்படுகிறது. அதேபோன்று தூய்மைப் பணியாளர்கள், DBC(டெங்கு) பணியாளர்கள், மருத்துவமனை ஊழியர்கள், பொறியியல் மற்றும் பொது பிரிவு பணியாளர்கள் அனைவருக்கும் தினமும் ஒரு முறை பயன்படுத்தக் கூடிய முககவசம் தேவைபடுவதினால், முககவசம் தேவைப்படுகிறது. DBC(டெங்கு) பணியாளர்கள் மூலம் அனைத்து வார்டு பகுதிகளின் பொதுமக்களுக்கு உடல் வெப்பநிலை, ஆக்சிஜன், நாடி துடிப்பு அளவு பரிசோதனை செய்து, கணக்கெடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதினால், அனைத்து பணியாளர்களுக்கு சானிடைசர் பயன்படுத்துவதினால், சானிடைசர் தேவைப்படுகிறது. எனவே, கீழ்கண்ட கிருமிநாசினிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் இருப்பு இல்லாத காரணத்தினால், கூடுதல் தலைமை செயலாளர், தமிழக அரசு, சென்னை–09அவர்களின்கடிதத்தில்தெரிவித்துள்ளவாறு கடித எண்.74/JS(MA)/Finance(Salaries)/2020 Dt.01.04.2020படி அவசரம் அவசியம் கருதி கோவிட்–19 தடுப்பு நடவடிக்கையினை கருத்தில் கொண்டு மேற்கண்ட பொருட்களை வாங்கிட ஒப்பந்தப்புள்ளி பெற தேவையில்லை என்பதற்கு விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளமையால், கீழ்கண்ட அளவில்,

| | | | |
|---|---|---|---|
| 1. | பிளீச்சிங் பவுடர் | – | 5000கிலோகிராம் |
| 2. | நீர்த்த சுண்ணாம்பு | – | 20000கிலோகிராம் |
| 3. | கபசுர குடிநீர் பவுடர் | – | 250கிலோகிராம் |
| 4. | மூன்று அடுக்கு முககவசம் (one Use) | – | 10000எண்ணிக்கைகள் |
| 5. | சானிடைசர் | – | 100லிட்டர் |
| 6. | லைசால்(அ) அதற்கு இணையானவை | – | 3000லிட்டர் |

வாங்கிடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு–15ன் கீழ் செலவு மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தினை கோவிட்–19 தடுப்பு பணிக்காக அரசு வழங்கிய நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேலே குறிப்பிட்டுள்ள வரிசை எண்.1 முதல் 5 வரை கண்டுள்ள பொருட்கள் யாவும், தனவந்தரி நானே அயுசாதி, தி.நகர், சென்னை–17 என்கின்ற நிறுவனத்தில் தரமாக கிடைப்பதினால், அந்நிறுவனத்தில் வாங்கிட பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1030/2020/எச்1**
**தீர்மான எண் . 91 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.9.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது மக்கள் தினசரி பாதுகாக்கப்பட்ட குடிநீர் காலை , மாலை இரண்டு வேலைகள் நகரில் பல்வேறு பகுதிகளில் உள்ள 13 மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் மற்றும் மேல்நிலை தொட்டி வளாகத்திலிலுள்ள 29 ஆழ்துளை கிணறுகள் மூலம் தண்ணீர் ஏற்றப்பட்டு தினசரி சப்ளை செய்யப்படுகிறது . தற்சமயம் குடிநீர் பிரிவில் மேல்நிலை தண்ணீர் தொட்டி காவலர்கள் 5 நபர்கள் மட்டுமே உள்ளனர் .இவர்களை வைத்துக்கொண்டு அனைத்து மேல்நிலை தண்ணீர் தொட்டி மற்றும் ஆழ்துளை கிணறுகளை பராமரிக்க இயலாமல் உள்ளது . மேலும் மின் தடை காலங்களிலும் மின்சாரம் மின்சாரம் உயர் மற்றும் குறைந்த மின் அழுத்தம் காரணமாக மின் மாற்றம் ஏற்படும் பொழுது மின் மோட்டார் பம்புகளை

இயக்குவது மிக சிரமமாக உள்ளது . இதனால் தினசரி குடிநீர் விநியோகம் தடைபடும் நிலை உள்ளது. எனவே குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதியும் , பொது மக்கள் நலன் கருதியும் தினசரி குடிநீர் விநியோகம் தடைபடாமல் இருக்கவும் ஜூலை மாதம் 2021 ஒரு மாதத்திற்கு 3 நபர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தர விலை பட்டியல் படி ஒரு நாளைக்கு ரூ.360/. வீதம் பணி விலை அடிப்படையில் பணி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலக குறிப்பு:- 1.** மன்றம் அனுமதிக்கலாம்.

2. தனி அலுவவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 2068/2021/இ1)**

**தீர்மான எண் . 92 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.10.** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம் TN-31/ AE 5944 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டதில் சர்வீஸ் செய்யப்பட்டதற்கு ரூ.4375/– செலவினம் திரு.P. மணி , ஓட்டுனர் அவர்களால் செலவு செய்யப்பட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது . அதனால் இத் தொகையை திரு.P. மணி , ஓட்டுனர் அவர்களுக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1550/2021/இ1**

**தீர்மான எண் . 93 அனுமதிக்கப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி